**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234/2016**

**Deposition of P.W.** 10

Name : திரு. கோடிலிங்கம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் கூடுதல் காவல்கண்காணிப்பாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று சென்னையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 18.10.2012ம் தேதி தக்கலை மற்றும் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பை கவனித்தேன். அன்றைய தேதியில் உதவி ஆய்வாளர் கொற்றிக்கோடு திரு. ஆறுமுகம் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த குற்றஎண்.220/2012 வழக்கின் முதல் தகவல் அறிக்கை என் விசாரணக்கு எடுத்து கொண்டு மாலை 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் நந்தகுமார் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவம் தொடர்பான

வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7. மேற்படி பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் சந்திர பிரபா, உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம், நந்தகுமார், ராஜேந்திரன் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.12.2012ம் தேதி கல்குளம் தாசில்தார் திருமதி. உஷா அவர்களையும் கல்குளம் வட்ட இணை ஆய்வாளர் திரு. ரெத்தினராஜ் அவர்களையும். கன்னியாகுமரி உதவி புவியியலாளர் அவர்களையும் வேளிமலை கிராம உதவியாளர் திருமதி. லதா அவர்களையும் குறுவட்ட அளவையர் திரு. சாமி அவர்களையும் விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.10.2012ம் தேதி துணை இயக்குனர் புவியியல் மற்றும் சுரங்கதுறை அவர்களுக்கு சட்ட விரோதமாக எடுக்கப்பட்ட பரப்பு குறித்தும், கல்களின் அளவு குறித்தும், அறிக்கை தருமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பின் தக்கலை காவல்நிலையத்திற்கு புதிய ஆய்வாளர் நியமனம் செய்யப்பட்டதால் நான் எனது விசாரணையை முடித்து வழக்கு கோப்பை தக்கலை காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

18.10.2012ம் தேதி இவ்வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிலஅளவை மேற்கொள்ள வேண்டிய பணி நிலஅளவையரை சேர்ந்தது என்றால் சரிதான். 18.10.2012ம் தேதிமாலை நான் சம்பவ இடத்திற்கு போனேன். நிலஅளவையர் எனக்கு தனியாக அறிக்கை கொடுக்கவில்லை. சம்பவ இடத்திற்கு நான் போகும் போது

என்னுடன் காவல் உதவி ஆய்வாளர் வந்தார். கனிமவளத்துறையிலிருந்து அறிக்கை நான் பெறவில்லை. வேண்டுகோள் கடிதம் மட்டும் கொடுத்தேன். சம்பவ இடத்தை நான் பார்க்கும் போது பாறையை உடைத்ததற்கான வெடிக்குழி அடையாளங்கள் இருந்தது. சம்மந்தப்பட்ட இடத்தில் கல் உடைப்பதற்கு இதற்கு முன்னர் உரிய உரிமம் வழங்கப்பட்டிருந்தது என்றால் 2006ம் ஆண்டு வரை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. விடுபட்ட நாட்களுக்கு நீதிமன்ற உத்தரவு படி 982 நாட்கள் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிறகு எதிரி உரிமம் பெற தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் தான் இருந்தது. நிலுவையில்இருந்ததற்கான நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் மனுதாரரின் மனு நகலை மட்டும் பார்வையிட்டேன் நீதிமன்ற உத்தரவு வழக்கு கோப்பில் இல்லை. அவணங்களை சரிவர ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு படி கல் உடைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு வழக்கு கோப்புடன் இணைக்கப்பட்டிருந்தது. எந்த தேதி நீதிமன்ற உத்தரவு எங்களுக்கு கிடைத்தது என்று ஞாபகமில்லை. நான் இவ்வழக்கை சரிவர விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கனிமவளத்துறையினரை நான் விசாரித்துள்ளேன். வாக்குமூலமும் பதிவு செய்துள்ளேன். நான் சொல்வது போல் ஆவணங்களை பார்வையிடவில்லை என்றும், சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.